**நெஸ்லே லங்கா நிறுவனம், உரும்பிராயில் புதிய பால் குளிரூட்டல் மையமொன்றை திறந்து வைத்து, யாழ்ப்பாணத்திற்கு மேலும் வலுவூட்டியுள்ளது**

இலங்கை பாலுற்பத்தியில் தன்னிறைவு அடைய உதவ வேண்டும் என்ற தனது முயற்சியில், யாழ்ப்பாணத்தில் மற்றுமொரு பால் குளிரூட்டல் மையத்தை புதிதாக ஆரம்பித்து வைத்துள்ள நெஸ்லே லங்கா நிறுவனம், உள்நாட்டு பாலுற்பத்தி மேம்பாட்டு முன்னெடுப்புக்களில் மற்றுமொரு சாதனை இலக்கை எட்டியுள்ளது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் நெஸ்லே நிறுவனத்தின் அதிகாரிகள் முன்னிலையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

உரும்பிராயில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த புதிய பால் குளிரூட்டல் மையமானது, அப்பிரதேசத்திலுள்ள பாற்பண்ணையாளர்கள் தங்களது புத்தம்புதிய பாலை தரமும், நலனும் கெட்டுப்போகாது பேண உதவும். அவர்களுடைய குடும்பத்தினரின் தேவைகளுக்கு உபயோகிக்கப்படுகின்ற பாலுக்கு மேலதிகமாக கிடைக்கின்ற பாலே இதன் மூலமாக சேகரிக்கப்படுகின்றது. இப்புதிய ஏற்பாட்டு வசதியானது உயர் தர சோதனை உபகரணத்தைக் கொண்டுள்ளதுடன், பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களுடைய பாலின் தரத்தின் அடிப்படையிலேயே கொடுப்பனவு வழங்கப்படும். பாலின் தரம் உயர்வானதாக இருக்கும் போது அவர்கள் அதிக விலையைப் பெற்றுக்கொள்ள முடியும். இது அவர்கள் அதிகமான அளவில் சிறந்த தரத்திலான பாலை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கும்.

இலங்கையில் தனியார் துறை மத்தியில் மிக அதிகளவான புத்தம்புதிய பாலைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள நெஸ்லே நிறுவனம், தினசரி 20,000 வரையான பாற்பண்ணையாளர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்து வருவதுடன், *நெஸ்பிரே, மைலோ* மற்றும் *மில்க்மெயிட்* போன்ற தனது உற்பத்திகளை தயாரிப்பதற்கு அதனை உபயோகித்து வருகின்றது.

1980 களின் ஆரம்பம் முதலாக உள்நாட்டில் பாலுற்பத்தித் துறையை மேம்படுத்துவதில் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வந்துள்ளதுடன், உள்நாட்டில் புத்தம்புதிய பாலின் உற்பத்தியை அதிகரித்து, நாடு பாலுற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கு உதவுவதற்கு கடந்த காலங்களில் உள்நாட்டு அரசாங்கம் மற்றும் பாற்பண்ணையாளர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வந்துள்ளது.

*''கடந்த காலங்களில் வட பகுதியை அபிவிருத்தி செய்ய உதவுவதற்காக அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற புத்தம்புதிய பாலை அதிக பட்ச அளவில் கொள்வனவு செய்யும் முயற்சிகளை நாம் தீவிரப்படுத்தியுள்ளதுடன், மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளோம்.''* என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டார். *''உள்நாட்டில் புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்வதில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், உள்நாட்டிலுள்ள நுகர்வோரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, அவர்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்பு ஆற்றும் வகையில் பாலை மூலப் பொருளாகக் கொண்ட உயர் தரத்திலான உற்பத்திகளை தொடர்ந்தும் வழங்குவோம். உரும்பிராயில் இப்புதிய பால் குளிரூட்டல் மையத்தை திறந்து வைத்துள்ளதன் மூலமாக வடக்கிலுள்ள எமது பாற்பண்ணையாளர்கள் விநியோகிக்கும் பாலின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றை அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களுக்கு நிலைபேற்றியலுடனான வாழ்வாதாரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.''*

கால்நடைத் தீவனம், சினைப்படுத்தல் மற்றும் கால்நடை சுகாதாரம், பண்ணை முகாமைத்துவம் மற்றும் தர நிர்ணயம் என பல்வேறுபட்ட தொழில்நுட்ப தலைப்புக்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பில் பாற்பண்ணையாளர்கள் மத்தியில் பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நெஸ்லே நிறுவனம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. அதிகளவான பாலை கறக்கின்ற பசுக்களை இனப்பெருக்கம் செய்வதற்கு செயற்கைமுறை சினைப்படுத்தல் நடைமுறைகளை ஊக்குவிப்பதற்குப் புறம்பாக, பாற்பண்ணைகளை மேம்படுத்துவதற்கு மிக முக்கியமான உபகரண, மருந்து வகை மற்றும் நிதியுதவி வசதிகளையும் அது வழங்கிவருகின்றது.

திரு. நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள், *''வட பிராந்தியத்தில் பாலுற்பத்தித் தொழிற்துறையை மேம்படுத்தி, அதன் மூலமாக எமது பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு நற்பயனை ஏற்படுத்தி வருகின்றமைக்காக நெஸ்லே நிறுவனத்தின் போற்றத்தக்க பணிக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பயிற்சி, மேம்பாட்டு முன்னெடுப்புக்கள் மற்றும் தொழில்நுட்பரீதியிலான உதவிகள் மூலமாக எமது பாற்பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக அவர்கள்*

*தொடர்ச்சியாக பணியாற்றி வந்துள்ளனர். நிறுவனத்தின் முயற்சிகள் அனைத்தும் சிறப்பாக அமையட்டும் என எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதுடன், உரும்பிராயிலுள்ள உள்ளூர் பாற்பண்ணையாளர்கள் சமூகம், இப்புதிய குளிரூட்டல் மையத்தின் மூலமாக உச்சப் பயனைப் பெற்று, தேசத்தின் நுகர்விற்கு உள்நாட்டில் பெறப்பட்ட, புத்தம்புதிய பாலை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.''* எனக் குறிப்பிட்டார்.